


நேற்று (13.07.2023) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட குழுக்களில் "தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் என்ற குழுவின் கூட்டம் இக்குழுவின் தலைவரும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான இ.பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இணைத் தலைவர் சமூக நலம் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளரும், உறுப்பினர் செயலருமான முனைவர் ப.செந்தில்குமார், உறுப்பினர்கள் நீதியரசர் அக்பர் அலி, கவிஞர் ரவி சுப்பிரமணியன், கவிஞர் மனுஷ்யபுத்திரன், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட திருத்தணி மேற்கு ஒன்றியச் செயலாளர் என்.கிருஷ்ணன் இல்லத் திருமண விழா திருத்தணியில் தனியார் மண்டபத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன்.எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இதில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்பிஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., திருத்தணி எம்.பூபதி, உள்பட மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் குடும்பத்தினர்கள் கலந்து கொண்டனர்.

### போக்குவரத்து - சாலை பாதுகாப்பு ஆணையரின்

# இணையதளம் முறைப்படி தமிழில் மொழிபெயர்ப்பு!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்! அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில்!

சென்னை, ஜூலை.14-

போக்குவரத்து மற்றும் சாலைப்பாதுகாப்பு ஆணையரின் இணையதளம் முறைப்படியாக தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுத் தயாரிக்கப்பட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்.

மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு துறைகளுக்கான இணையதளங்களை ஆங்கிலத்தில் மட்டுமல்லாமல் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையிட்டதற்கு இணங்க போக்குவரத்து மற்றும் சாலைப்பாதுகாப்பு ஆணையரின் இணையதளம் முறைப்படியாக தமிழில் தயாரிக்கப்பட்டு நேற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப் பட்டது.

இந்தத் தமிழ் இணையதளத்தினை முறைப்படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (13.07.2023) தலைமைச் செயலகத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். இந்த நிகழ்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்து (ம) சாலைபாதுகாப்பு ஆணையர் அ.சண்முக சுந்தரம், மற்றும் தேசியத் தகவல் மையத்தின் மாநிலத் தகவல் இயல் அலுவலர் ஆண்டனி, தேசிய தகவல் மையத்தின் முதுநிலை இயக்குநர் ஈஸ்வரன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

மாநிலம் முழுவதும் உள்ள 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும், 54 வாகன போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகங்களிலும் பொதுமக்கள் தங்களது சேவைகளை எவ்வித சிரமமும் இன்றி பெறும் வகையில் 48 சேவைகளை முழுக்கவும் கணினி மயப்படுத்தி ஆன்லைன் மூலமே பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக ஏற்கனவே கீழ்க்கண்ட 6 சேவைகள் இணையதளத்தில் கொண்டு வரப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

மேலும் இதனை அடுத்து 42 சேவைகள் ஆன்லைனில் கொண்டு வரப்படும் என்று 2023-24ம் ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடரில் போக்குவரத்து துறை அமைச்சர் அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து துறை மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக நேற்று முதல் (14.07.2023) கீழ்க்கண்ட 25 சேவைகள் ஆன்லைனில் கொண்டு வரப்படவுள்ளன. மேலும், மீதமுள்ள கீழ்க்கண்ட 17 சேவைகளையும் ஆன்லைனில் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை தேசிய தகவல் மையம் எடுத்து வருகிறது. இந்த பணிகளும் விரைவில் முடிக்கப்படும்.

மேற்கண்ட நடவடிக்கைகள் மூலம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், வாகன போக்குவரத்து ஆய்வாளர் அலுவலங்கள் ஆகியவற்றில் மக்களுக்கு அளிக்கப்படும் சேவைகளை விரைந்து அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆன்லைன் சேவைகளை பொதுமக்கள் பெறுவதற்கு முதலில் தங்களது ஆதார் அட்டையில் உள்ள பெயர், முகவரி உள்ளிட்ட அனைத்து விவரங்களும் அப்டேட் ஆக இருப்பதை உறுதி செய்த பின்னரே உள்ளீடு செய்ய முடியும். விவரங்கள் மாறுபட்டிருந்தால் இந்த ஆன்லைன் சேவையை பெற இயலாது.

எம்.எல்.ஆர். மற்றும் ஓட்டுநர் உரிமம் பெறுவதில் அதிக எண்ணிக்கையில் பொதுமக்கள் வருவதால் விண்ணப்பங்களின் எண்ணிக்கை எந்தெந்த அலுவலகங்களில் அதிகமாக உள்ளதோ அல்லது பெறப்படுகின்றதோ அந்த அலுவலகங்களை சனிக்கிழமை அன்றும் பணியாற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலம் அந்தந்த மாவட்டத்தில் எந்தெந்த அலுவலகங்கள் சனிக்கிழமை அன்று செயல்படும் என்பது போன்ற அனைத்து விவரங்களை உள்ளடக்கிய விரிவான பத்திரிக்கைச் செய்தியும் வெளியிடப்படும். இந்த வசதியினையும் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### அமலாக்கத்துறையிடம் மேலும் அதிகாரங்கள் குவிப்பு! - இயக்குநரான

# 'சஞ்சய் குமார் மிஸ்ராவுக்கு பதவி நீட்டிப்பு வழங்கியது சட்ட விரோதம்' என உச்சநீதிமன்றம் கண்டனம்!

## 'தீக்கதிர்' நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜூலை 14-

அமலாக்கத்துறை இயக்குநராக சஞ்சய்குமார் மிஸ்ராவுக்கு பதவி நீட்டிப்பு வழங்கியது சட்டவிரோதமானது என உச்சநீதிமன்றம் இடித்துரைத்துள்ளது எனவும், அமலாக்கத்துறையிடம் மேலும் அதிகாரங்களைக் குவிக்கும் வகையில் நிதி மோசடி தடுப்புச் சட்ட வரம்புக்குள் ஜி.எஸ்.டி. நெட்வொர்க்கை சேர்க்க மோடி அரசு முடிவு செய்துள்ளதை 'தீக்கதிர்' நாளேடு 13.7.2023 அன்று தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய அரசு மத்திய புலனாய்வு அமைப்புகளை தன்னுடைய அரசியல் லாபத்திற்காகவும், எதிர்க்கட்சி களை பழி வாங்குவதற்காகவும் பயன்படுத்தி வருவது கண்கூடு. தங்களுடைய நோக்கத்திற்கு ஒத்துழைப்பவர்களை மட்டுமே அந்நிறுவனங்களின் உயர் பொறுப்புகளில் நியமிப்பதும், அவர்களுக்கு விதிமுறைகளுக்கு மாறாக பணி நீட்டிப்பு வழங்குவதும் வழக்கமான நடைமுறையாகவே மாறிவிட்டது.

ஒன்றிய அரசினால் மிகவும் தவறாகப் பயன் படுத்தும் அமைப்பாக அமலாக்கத்துறை மாற்றப் பட்டுவிட்டது. அமலாக்கத்துறை இயக்குநராக சஞ்சய்குமார் மிஸ்ராவுக்கு பதவி நீட்டிப்பு வழங்கியது சட்ட விரோதமானது என்று உச்சநீதி மன்றம் இடித்துரைத்துள்ளது.



தீக்கதிர்

2023 ஜூலை 13 வியாழக்கிழமை

பணி நீட்டிப்பும்–அதிகாரக் குவிப்பும்

இவருக்கு விதிகளை வளைத்து மூன்று முறை பணி நீட்டிப்பு வழங்கப் பட்டுள்ளது. அம லாக்கத் துறையின் சமீப காலத்திய செயல்பாடு களை கவனிக்கும் போது இவருக்கு வழங்கப் பட்ட பணி நீட்டிப்புக்கான காரணம் என்ன என்பதை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

தங்களுடைய கட்டளைக்கேற்ப செயல்படும் நபர்களை தொடர வைப்பதற்காகவே சிபிஐ மற்றும் அமலாக்கப்பிரிவு இயக்குநர்களின் பதவிக் காலத்தை இரண்டு ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாக மோடி அரசு அதிகரித்தது.

தமிழ்நாடு அமைச்சர் செந்தில் பாலாஜி கைது தொடர்பான வழக்கில் அமலாக்கத்துறை சுயேச்சையாகவே செயல்படுகிறது என்றும், யாருடைய நிர்ப்பந்தத்திற்கும் அடிபணிவதில்லை என்றும் வாதிடப்படுகிறது. ஆனால் உண்மை நிலவரம் என்ன என்பதை சஞ்சய் குமார் மிஸ்ரா பதவி நீட்டிப்பை உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளதிலிருந்து புரிந்து கொள்ள முடியும்.

இந்நிலையில் அமலாக்கத்துறையிடம் மேலும் அதிகாரங்களை குவிக்கும் வகையில் நிதி மோசடி தடுப்புச் சட்ட வரம்புக்குள் ஜி.எஸ்.டி. நெட்வொர்க்கை சேர்க்க மோடி அரசு முடிவு செய்துள்ளது. தமிழ்நாடு உட்பட எதிர்க்கட்சி ஆளும் மாநில அரசுகள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

நிதி மோசடி தடுப்புச் சட்டத்தின் 66ஆவது பிரிவின் கீழ் சில மாற்றங்களைச் செய்து தேசிய புலனாய்வு முகமை, மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் உள்ளிட்ட ஒன்றிய அரசின் 15 விசாரணை அமைப்புகள் நிதி மோசடி தடுப்புச் சட்ட வரம்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்த அமைப்புகள் அமலாக்கத்துறையிடம் தகவல்களை பகிர்ந்து கொள்ள முடியும் என்று கூறப்பட்டுள்ளது. பழிவாங்கும் நடவடிக்கையை மேலும் விரிவுபடுத்தவே இந்த மாற்றம் உதவும்.

அமலாக்கத்துறை உள்ளிட்ட அனைத்து ஒன்றிய புலனாய்வு முகமைகளும் சுதந்திரமாகவும், சுயேச்சையாகவும் செயல்பட வேண்டியது அவசியம். இதைத்தான் உச்சநீதிமன்றம் மீண்டும் ஒருமுறை சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது.




சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், 2023–2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் குறிப்பாக சென்னைப் பெருநகர பகுதியிலுள்ள 26 சட்டமன்ற தொதிகளின் மேம்பாட்டிற்கான 34 அறிவிப்புகள் உட்பட அனைத்து அறிவிப்புகளையும் செயல்படுத்தும் வகையில் திட்ட வடிவமைப்பாளர்கள் தயார் செய்த வடிவமைப்புகளை விளக்கினர். இவ்வடிவமைப்புகளை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்து, கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி, மேற்படி நடவடிக்கைகளை துரிதமாக செயல்படுத்தும்படி அறிவுறித்தினார். இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, முதன்மைச் செயல் அலுவலர் திருமதி.கவிதா ராமு, தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு - மூன்று நாட்கள் நடைபெறுகிறது!

# தமிழ்நாடு இயல் - இசை - நாடக மன்றம் சார்பில் நாட்டிய விழா!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை!

## தலைமை: வாகை சந்திரசேகர்! முன்னிலை: விஜயா தாயன்பன்!

சென்னை, ஜூலை 14-

தமிழ்நாடு இயல் - இசை - நாடக மன்றம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாட்டிய விழா நடைபெறுகிறது.

ஜூலை 14,15,16 (வெள்ளி சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் சென்னை - இராஜா அண்ணாமலைபுரம் முத்தமிழ்ப் பேரவை திருவாவடுதுறை இராஜரத்தினம் கலையரங்கில் இவ்விழா நடைபெறுகிறது.

**14.7.2023**

14.7.2023-வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் நடைபெறும் இவ்விழாவில் - தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற உறுப்பினர் - செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் வரவேற்புரையாற்றுகிறார்.

விழாவிற்கு - தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை வகிக்கிறார்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ., வரவேற்புரையாற்றுகிறார்.

நாடாளு மன்ற மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா, விழாப் பேருரையாற்றுகிறார்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழு முதன்மை செயல் அலுவலர் திருமதி கவிதா இராமு இ.ஆ.ப. வாழ்த்துரை வழங்குகிறார்.

விழாவில் - முனைவர் திவ்யசேனா குழுவினரின் 'பண்ணும் பரதமும்' நாட்டிய நிகழ்ச்சி நடைபெறுகிறது.

**15.7.2023**

15.7.2023 - சனிக்கிழமை மாலை 5.30 மணி அளவில் தொடங்கும் விழாவில் - இயல், இசை, நாடக மன்ற உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் வரவேற்புரை யாற்றுகிறார்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை வகிக்கிறார்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. முன்னிலை வகிக்கிறார்.

மூத்த நாட்டியக் கலைஞர் கலைமாமணி நந்தினி ரமணி, முத்மிழ்ப் பேரவைத் தலைவர் ஜி.இராமானுஜம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

விழாவில் - கலை மாமணி பார்வதி ரவி கண்ட சாலா குழுவினரின் 'காவியக் கவிதைகள்' நாட்டிய நிகழ்ச்சி நடைபெறுகிறது.

**16.7.2023**

16.7.2023 - ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்குத் தொடங்கும் விழாவில் - தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற உறுப்பினர் - செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் வரவேற்றுப் பேசுகிறார்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை வகிக்கிறார்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. முன்னிலை வகிக்கிறார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விழாப் பேருரையாற்றுகிறார்.

சென்னை - சிதம்பரம் அகாடமி ஆஃப் பெர்பார்மிங் ஆர்ட்ஸ் நிறுவனர் திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் வாழ்த்துரை வழங்குகிறார்.

விழாவில் - கலைமாமணி முத்தரசி ரவியின் கலைக்கோயில் நாட்டியப் பள்ளி வழங்கும் - முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 'சங்கத் தமிழ்' இசை நாட்டிய நாடகம் நடைபெறுகிறது.

**10 வது ஆண்டு நினைவு நாள்**



14.7.2013

திருமதி **எஸ்.துரைப்பாண்டிச்சி** அம்மாள்

(க/பெ. மறைந்த கலைமாமணி **எஸ்.எஸ்.சிவசூரியன்** (நடிகர்)

**தாங்கள் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் எங்கள் மனதை விட்டு மறையவில்லை!**

மகன்கள்: **எஸ். சிதம்பரம், எஸ். கந்தகுமார், பூச்சி எஸ். முருகன்**

மற்றும் மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள்

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 9**

ம.அ.9.ந.க.எண்.இ1 / 595 / 2023

**மின்னணு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்**

| வ. எண் | பணியின் விவரம் | பணியின் மதிப்பு | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை, |
|---|---|---|---|---|
| 1 | மண்டலம்-9, பகுதி-26, வார்டு எண்.112ல் உள்ள வெள்ளாளர் சாலையில் புதிய சமூக நலக்கூடம் (தரை தளம் மற்றும் முதல் தளம்) கட்டும் பணி | 189.08 இலட்சங்கள் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் **03.08.2023 மாலை. 03.00 மணி**
ஒப்பப் படிவங்கள் **http://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **04.08.2023 மாலை. 03.30 மணி**

செ.ம.தொ.இ / 3656 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**மா.வ.அ / மண்டல அலுவலர் மண்டலம்-9**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

**GREATER CHENNAI CORPORATION SPECIAL PROJECTS DEPARTMENT**

S.P.D.C.No B1/0577/2022

**e -TENDER NOTICE**

*e - Tender is invited for the following work in Two Cover System as per details furnished below.*

**S.P.D.C.No.B1/0577/2022:-** Establishment of additional Pond at Villivakkam Tank in Dn.94, Zone - VIII under Smart City Fund - Approximate value of work - Rs.7.50 Cr. (Inclusive of GST) - Submission of E.M.D. Rs.7,50,000/-

| | | |
|---|---|---|
| Tender document will be available in website | : | https://tntenders.gov.in |
| Pre-bid meeting date and time | : | 24.07.2023 at 3.00 p.m |
| Tender last date and time of submission | : | 16.08.2023 upto 3.00 p.m. |
| Tender opening date and time | : | 17.08.2023 at 3.00 p.m |

DIPR / 3653 / Tender / 2023

**Superintending Engineer / Spl. Projects.**

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்